


# ஷ்ரக் அல்லது சிறிய ஜாக்கெட்டை உருவாக்குங்கள்

இந்த வீடியோவில் ஒரு அழகான டிசைனர் ஸ்ரக் எப்படி தைப்பது என்று பார்க்கலாம்.











இதற்கு தேவையான பொருட்கள் 87 சென்டிமீட்டருக்கு 67 சென்டிமீட்டர் அளவில் புசுபுசு என்றோ லேஸ் வைத்தோ அல்லது சீக்குவென்ஸ் வைத்தோ இருக்கும் ஒரு துணி. குண்டுசிகள், மற்றும் அலங்கரிப்பதற்கு செயற்கை பூக்கள்.

துணியின் உள்பக்கம் மேலிருக்கும் படி துணியை திருப்பிக் கொள்ளவும். கால் இன்ச் தையலுக்கு விட்டு இரண்டு மடிப்பு விட்டு சிறிய பகுதியிலிருந்து தைக்க தொடங்கவும். மடிப்பு கலையாமல் இருக்க பின் செய்து கொள்ளலாம். மறுமுனை வரும் வரை தைக்கவும்.

இதே போல மற்ற பாகத்தையும் பின் செய்து கொண்டு தைத்து விடவும். நீளமான பகுதி நகராமல் இருக்க பின் செய்துகொள்ளவும்.

இவ்வாறு ரெடி செய்த துணியை மிஷினில் வைத்து உள்மடிப்பு ஊசிக்கு நேராக இருக்குமாறு வைக்கவேண்டும். துணியை சரியாக வைத்து பிரஷர் புட் ஐ இறக்கவும். ஊசி இறங்கும் போது பின்களை மறக்காமல் அகற்றி விடுங்கள்.

இது போலவே எதிர்புறமும் செய்யவேண்டும். சீராக தையல் விழுகிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்பொழுது டேபிளில் துணியின் கீழ் பகுதி மேல் இருக்குமாறு பரப்பி வையுங்கள். தைத்த பகுதிகளின் கார்னர்கள் நடுவில் இருக்கும் படி மடித்து வையுங்கள். 90 டிகிரி கோணத்தில் அது இருக்க வேண்டும். எல்லா கார்னர்களும் சரியாக இருக்கவேண்டும்.

மறுபக்கமும் இப்படியே செய்யவும்.



வெளிப்புற கார்னர்களில் இருந்து 17 சென்டிமீட்டர் உள்ளே மார்க் செய்துகொள்ளுங்கள். இப்பொழுது மேல் பக்கம் இரண்டையும் ஒன்றோடு ஒன்று பார்க்கும் படி வைத்து உள் பக்கமாக திருப்பி பின் செய்து கொள்ளுங்கள்.

எதிர் பக்கமும் இதே போல் செய்யுங்கள்.

அடுத்ததாக மிஷினில் துணியை வைத்து மார்க் செய்துள்ள 17 சென்டிமீட்டர் வரை தைக்க வேண்டும். தைக்கும் போது பின்னை அகற்றவும். முடிவில் தையலை லாக் செய்ய மறக்காதீர்கள்.

அடுத்த பக்கமும் இதே போல் செய்ய வேண்டும். இப்பொழுது தைத்த துணியை டேபிளில் வைத்து பார்த்தால் ஓரத்தில் இருந்து 10 இன்ச் அளவிற்கு தைத்திருப்பீர்கள்.



இப்பொழுது ஓரங்களை தைக்க ஏற்கனவே சேர்த்து வைத்திருக்கும் பகுதியை பிரித்து கால் இன்ச் அளவில் இரண்டு மடிப்பு மடித்து பின் செய்துகொள்ளவும்.

துணியை சுற்றி இதே போல் மடித்து தொடங்கிய இடத்திற்கே வர வேண்டும்.

துணியை மிஷினில் வைத்து பிரஷர் புட்டின் ஓரத்தில் அலைன் செய்து புட் ஐ கீழே இறக்கி தைக்கவும்.

அதன் முடிவுக்கு வரும் போது தையலை லாக் செய்யவேண்டும். தைத்து முடித்த உடன் மிஷினிலிருந்து துணியை எடுத்து வெளிப்பக்கம் திருப்பிக் கொள்ளவும். உங்களுடைய அழகிய ஷ்ரக் ரெடி.



மேலும் அலங்கரிக்க ஒரு ப்ரூச்சை குத்தி விட்டால் மிக அழகாக இருக்கும். பல வண்ணங்களில் பல வகை துணிகளில் உங்கள் திறமையை வெளிப்படுத்தி உங்கள் நண்பர்களுக்கும் பரிசளிக்கலாம்.